# வேலணை ஒன்றியம் - பிரித்தானியா

# VELANAI ONRIYUM - UK






## 4ம் ஆண்டு விழா மலர்

## 4th YEAR ANNIVERSARY








**Saturday, 29th April 2017**
**South Ruislip Community Association**
**Deane Park, Long Drive**
**South Ruislip HA4 0HS**





"எம் ஊரின் அபிவிருத்தியினூடே எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணை ஒன்றியம் - பிரித்தானியா

# VELANAI ONRIYUM -UK

# 4ம் ஆண்டு விழா மலர்

# 4th YEAR ANNIVERSARY

"எம் ஊரின் அபிவிருத்தியினூடே
எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்

## VO - UK

**Saturday, 29th April 2017**

**South Ruislip Community Association**
**Deane Park, Long Drive, South Ruislip HA4 0HS**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ்த்தாய் வாழ்த்து

## முன்னிலை

1. செந்தமிழ்ச் செல்வியாந் தெய்வமடி யிவள்
   தேவர்கள் போற்றிடும் தெய்வமடி
   கொந்தலர் சோலையில் ஏழிசை கூவிடுங்
   கோமளப் பாவையிக் கொம்பரடி.

2. தென்றல் தவழ்ந்திடும் தென்பொதி கைமலை
   தேவியிவள் வந்து தோன்றுமிடம்
   கொன்றை யணிந்தவன் கோதில்சொற் பாவலர்
   கூடி வளர்த்திடுங் கோதையடி

3. சிந்தா மணிதிருக் கோவை சிலம்புடன்
   செம்மை திகழ்மணி மேகலையே
   நந்தா வளையுயர் குண்டல மாவிவை
   நங்கை யணந்திடும் நல்லணிகள்.

4. தெள்ளுந் திருக்குறள் முடிபுனைந்து நல்ல
   சேக்கிழார் ரீந்தசெங் கோல்பிடித்தே
   அள்ளும் அகம்புற ஆக்கப் பெருக்குடன்
   அன்னை யிவளர சாண்டிருந்தாள்.

5. ஓங்கு மிமயத்தில் விற்பொறித்தா ளிந்த
   உலகம் முழுதும்பே ரொளிவிரித்தாள்
   தாங்கும் அறம்பல போற்றிவைத் தாளெங்கள்
   தாயிவள் மாண்பினைச் சாற்றுவமே.

6. ஆங்கில வாணரின் ஆய்வுக் கலையெலாம்
   அன்னை யுளங்கொள ஆக்கிடுவோம்
   ஓங்குஞ் சுதந்திர உண்மை யுணர்வினால்
   உலகினை யாளவுங் கண்டிடுவோம்.

7. வாழிய செந்தமிழ் வாழியவே கலை
   வண்மை கனிந்தென்றும் வாழியவே
   ஊழி பலபல சென்றும் உலையாத
   உண்மை ஒளியுடன் வாழியவே.

**வித்துவான் க. வேந்தனார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை ஒன்றியம் - பிரித்தானியா
# செயற்குழு உறுப்பினர்கள் 2016 -17




திரு வேந்தனார் இளஞ்சேய் - **தலைவர்**

திரு பொன்னம்பலம் சிறீதரன் - **பொருளாளர்**

திரு தியாகராசா கலைவேந்தன் - **செயலாளர்**

திரு சுந்தரம்பிள்ளை சிவச்சந்திரன் - **உபதலைவர்**

திருமதி சிந்து கயன்ராஜ் - **உப செயலாளர்**

திருமதி பத்மாவதி (லதா ) அருள்ராஜ் - **உப பொருளாளர்**

### செயற்குழு உறுப்பினர்கள்

திரு வேலுப்பிள்ளை தவனேசன்

திரு சொர்ணலிங்கம் முகுந்தன்

திருமதி கலைவாணி அருளன்

திரு பாலச்சந்திரன் கஜேந்திரன்

திரு துரைசிங்கம் சிவகுமாரன்

திருமதி மைதிலி ஜெகதீஸ்வரன்

திருமதி அம்பிகை சிவனேசநாதன்

திரு ஞானசம்பந்தன் ஞானானந்தன்

திரு அமிர்தலிங்கம் ஜெயகுகன்

திரு செல்லத்துரை சதீசன்

திரு இராமச்சந்திரன் குகப்பிரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VO-UK Youth Organisation Committee 2016-18



**From Left to Right**
Elani Jeyagugan, Sweena Jeyagugan, Subakavi Jegatheeswaran, Paarkavi Jegatheeswaran, Sukanth Yoganathan, Lavan Rasanathan, Priyanth Yoganathan, Jeva Arulananthasivalingam, Wajieran Sivanesanathan, Sharmilan Sivakumaran, Ilamaindhan Ilansei, Jevan Arulananthasivalingam **(President)**, Sagana Sivakumaran , Arauthy-Gina Gnanasampanthan **(Treasurer)**, Sophie Sivachandran **(Secretary)**

**"எம் ஊரின் அபிவிருத்தியினூடே**
**எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேலணை ஒன்றியம் - பிரித்தானிய தலைவரின் செய்தி

வேலணை ஒன்றியம் - பிரித்தானியா தொடங்கப்பட்டு, நான்கு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இன்று தன் நான்காம் நிறைவு விழாவை கொண்டாடிடும் இத்தருணத்தில் விழா சிறப்பாக நடாத்திட என் மனமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாம் கடந்த மூன்று வருடமும் விழா மலரை வெளியிட்டிருந்தோம். அதில் எம் நோக்கங்கள் - செயற்பாடுகள் - எதிர்காலத்திட்டங்கள் - கணக்கு விபரங்கள் என பல விடயங்களையும் உங்களுக்குத் தெரியபடுத்தி யிருந்தோம். இந் நான்காம் ஆண்டு மலரிலும் நாம் தற்போது வேலணையில் செயற்படுத்திவரும் திட்டங்கள் செய்த, செய்யவுள்ள உதவிகள், பிரித்தானியாவில் எமது செயற்பாடுகள் போன்ற விடயங்களை பிரசுரித்துள்ளோம்.

ஒரு நிறுவனத்தின் சேவை - அந் நிறுவனத்தில் பங்கெடுத்துள்ள நிர்வாக உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், சமூக நலன்விரும்பிகள், வணிகப் பெருமக்கள் ஆகியோரின் பங்களிப்பு - கடின உழைப்பு, உண்மையான சுயநலமற்ற ஊழியம் என்பவற்றிலேயே தங்கியுள்ளது. எமக்கு இவ் அடிப்படையில் கடந்த நான்காண்டு களாக உங்களில் சிலர் பெரு மனதோடு உறுதியான - உண்மையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றீர்கள். ஆனால் இச்சிலர் என்பது பலராக இருந்தால் மட்டுமே நாம் மேற்கொண்டும் பல நல்ல திட்டங்களை புலத்திலும் இங்கும் செயற்படுத்திட முடியும். இதற்கு உங்கள் அனைவரினதும் பங்களிப்பை - அது பணமாகவோ - உழைப்பாகவோ - ஊக்குவிக்கும் நல்வாழ்த்தாகவோ கிடைத்திட வேண்டுகின்றேன்.

நாம் கடந்த ஆண்டு எமது இளையோர் அமைப்பையும் உருவாக்கி இருத்தோம். இவ்வமைப்பின் தலைவர் - செயலாளர் - பொருளாளர் ஆகியோரின் செய்தியும் இம்மலரில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இச்செய்திகளை அவர்கள் புலம் பெயர் மண்ணில் பிறந்து - வளர்ந்திருந்தும் - தமிழிலேயே எழுதித்தந்தமை எனக்கு மிக்க மகிழ்வைத் தருகின்றது. இவ் இளையோர் அமைப்பு வருங்காலங்களில் “ஊர் ஊற்று” என்ற காலாண்டுச் சஞ்சிகையை இங்கு தமிழ் / ஆங்கிலத்தில் வெளியிட வேண்டுமென்பது என் விருப்பம்.

இறுதியாக எமக்கு தொடர்ந்தும் ஆதரவு தந்து கொண்டிருக்கும் வணிகப் பெருமக்கள் ஊர் உறவுகள் - வேலணையைச் சாராத நல்லிதயம் கொண்ட நம் தமிழ் நலன் விரும்பிகள் அனைவருக்கும் என் நன்றியையும் - அன்பையும் தெரிவித்து விழா சிறப்புடன் நடந்திட வாழ்த்துகின்றேன்.

**“எம் ஊரின் அபிவிருத்தியினூடே**
**எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்**

அன்புடன்
**வேந்தனார். இளஞ்சேய்**
இலண்டன்
24- 04- 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

வேலணை ஒன்றியம் - பிரித்தானியா இன்று நான்காம் ஆண்டு நிறைவு விழாவை சீரும் சிறப்புமாக கொண்டாடுகின்றது. அதற்கு எனது வாழ்த்துக்கள்.

இதுவரை வேலணை ஒன்றியம் - பிரித்தானியா வேலணை மக்களுக்கு செய்த உதவிகளை நீங்கள் எல்லோரும் அறிந்திருப்பீர்கள் என நம்புகின்றேன். ஒவ்வொரு ஆண்டு விழா மலரிலும் எல்லா விபரங்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு ஐக்கிய ராச்சியத்திலும் இளையோர் அமைப்பை (VO -YO) உருவாக்கி அதில் இளையோர்களை உள்வாங்கி உள்ளோம். அவர்களும் எங்கள் ஒன்றியத்திற்கு பெரும் சேவை செய்து வருகிறார்கள்.

வேலணையில் உள்ள எங்கள் காரியாலயத்தில் கணனி வகுப்புக்கள் நன்றாக நடைபெறுவதை நான் நேரில் சென்று பார்த்துள்ளேன். வேலணை மக்கள் மேலும் பல உதவிகளை கேட்டு நிற்கின்றார்கள். அதில் முக்கியமாகஇ வேலணையில் உள்ள வைத்திய சாலைக்கு சிறு உதவி செய்ய தீர்மானித்துள்ளோம். அதாவது 3 அவசர நிலமை அவதானிப்பு கருவி, 3 மருத்துவ கட்டில்கள், Spot light அத்தோடு ஒரு Table உம் (மொத்தச் செலவு Rs 9,42,000 ) வாங்கி கொடுப்பதாக உறுதி செய்துள்ளோம். அதற்கான உதவிகளை இங்குள்ள நல்லுள்ளம் படைத்தவர்கள் செய்துள்ளார்கள். அவர்களுக்கும் எனது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கின்றேன். மேலும் 4ம் வருட கணக்கு விபரங்கள் பக்கம்-8,9 இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நன்றி.

"எம் ஊரின் அபிவிருத்தியினூடே

எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்."

**பொன்னம்பலம் ஸ்ரீதரன்**
பொருளாளர்
வேலணை ஒன்றியம் - பிரித்தானியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செயலாளர் வாழ்த்துரை

அனைவர்க்கும் வணக்கம்

கற்பனைக்கு எட்டாத மனிதப்பிறப்பின் மகிமை கொண்ட நாம், நாடு விட்டு-பிறந்த கிராமம் விட்டு-தூர தேசம் வந்தாலும். மனித உணர்வின் மகத்துவம் கருதி, எமது மண்ணை, அங்கு வாழும் மக்களை மறந்து விடாது நினைவு கூர்ந்து எமது பணியை நெஞ்சில் நினைத்து சேவை மனப்பான்மையோடு பணியாற்றி வருகின்றோம் என்பதை நீங்கள் அனைவரும் தெரிந்து இருப்பீர்கள்.

ஆகவே இந்தப்பணிக்காகவே உருவாக்கப்பட்ட எமது வேலணை ஒன்றியம் பிறந்து தனது நான்காவது ஆண்டை நிறைவு செய்கின்றது. அதனால் அமைப்பு தனது வளர்ச்சியை ஞாபகப் படுத்துவதோடு, காலத்துக்கு காலம் மக்களுக்கு செய்த சேவைகளையும் உங்களுக்கு ஞாபகப் படுத்த வேண்டிய கட்டாய கடமை எமக்கு உண்டு. அதைத் தெரியப்படுத்தவே இந்த மலரை நாம் வெளியிடுகின்றோம்.

கால நேரங்கள் மிகவும் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் இந்த இலண்டன் நாட்டில் இப்படி ஒரு மலரை கொண்டு வருவதென்றால் எத்தனை கடினமான பாதைகளில் நடந்து கடந்து, எமது தொழில் மூலமாக எற்படும் துயரங்களைக் கடந்து, ஏன் இதை செய்கின்றோமென்றால் எமது பணியில் மக்களுக்கு திருப்தியும் நம்பிக்கையும். குறையாது-தடைப்படாது வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்ற உணர்வே.

மனிதமென்ற ஒன்று இருக்கும் சிலரிடம்தான் இப்படியான. தூய்மையான நாட்டுப்பற்று இனப்பற்று மொழிப் பற்று வைத்து சேவை செய்யும் மனித நேயம் எற்படும். இதனை நாம் வெளிக்காட்ட வேண்டிய அவசியமும் நமக்குண்டு என்பதை நாம் உணர்கின்றோம் இதுமட்டுமல்லாமல் எமது கடமை, எமது செயற்பாடு நீண்டுகொண்டே செல்கிறது. நாம் அனைவரும் அதை உணர்ந்து ஒன்றுபட்டு உணர்வோடு மனிதநேயத்தோடு அவைகளை முன்னெடுத்து செல்ல நாம் தயாராக வேண்டும் எனக் கேட்டு. உங்களிடம் இருந்து விடை பெறுகின்றேன்

**"எம் ஊரின் அபிவிருத்தியினூடே**
**எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்**

நன்றி- வணக்கம்.

இவ்வண்ணம்

நம்பிக்கையோடு

**தி.கலைவேந்தன்**

செயலாளர்

21.4.17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VELANAI ONRIYUM -UK

## ACCOUNTS FOR THE PERIOD FROM 21.4.2016 TO 26.04.2017

| | £ | £ | £ |
|---|---|---|---|
| **Balance as per Last Year Account 20/4/16** | | | **2922.59** |
| **Income** | | | |
| KalaiMahal Vizha-29.10.2016 Short eats sale | | 186.20 | |
| Arrears Membership Fee for 2015/16 collection | | 245.00 | |
| Membership collection 2016/2017 | | 1,655.00 | |
| Membership collection 2017/2018 | | 425.00 | |
| Total Interest up to March 2017 | | 8.43 | |
| Total Contribution Received in UK -For Hospital Project | 4,875.00 | | |
| (The amount of £898 received in Velanai. Total Rec'd =£5773 , See Page 26) | | | |
| Roof Project-From Lakshmis Jewellers(See Page 25) | 1,150.00 | | |
| Free Shoes Donation(See Page 25) | 400.00 | | |
| Velanai Central Children Pre School Toilet - Mr Arun Manoharan -(See Page 26) | 500.00 | | |
| (Part of £500 Rec'd accounted in L/Y acc. Tot .Rec'd £1000) | | | |
| Eye Operation - Mr T Jeyakumaran( Wine Mart- HN & WM Ltd)-See Page 25 | 300.00 | | |
| Rathy Jewellers | 1,260.00 | | |
| Nada Mohan | 250.00 | | |
| Mayooranathan/Sothinathan (£300-Membership fee of 2x35) | 230.00 | | |
| Sarvananthan(13*25-m/s fee of 25) | 300.00 | | |
| Others Donation | 736.00 | | |
| | | 10,001.00 | |
| 2017 Brochure Advert -Paid in Advance | | 125.00 | |
| VO-UK Sports Surplus (Page 10) | | 1,848.13 | |
| VO-UK Sports - Unpaid Creditors | | 400.00 | |
| VO-UK Dinner & Dance Surplus (Page 11) | | 174.43 | |
| VO-UK 3rd Year Function Surplus | | 539.86 | |
| | | | 15,608.05 |
| | | | **18,530.64** |
| **Expenses:-** | | | |
| Annual Function 29.4.17 - Hall hire Deposit | | 150.00 | |
| Annual Function 29.4.17 - Hall hire £317 (Not yet Presented) | | 0.00 | |
| KalaiMahal Vizha Hall hire-29.10.16 | | 317.00 | |
| Kalai Mahal Vizha Expences - 29.10.16 | | 120.00 | |
| AGM 2017-Postage | | 87.12 | |
| Bank Charges & Transfer Fees | | 220.86 | |
| Transfer to Velanai Branch (See Page 9) | | 12,100.00 | |
| | | | **12,994.98** |
| **Balance c/fwd as at 26.04.2017** | | | **5,535.66** |
| Represented By:- | | | |
| VO-UK Youth Money | 1174.43 | | |
| VO-UK Youth Money-unpaid creditors | 400.00 | | |
| Velanai Hospital Money | 675.00 | | |
| Membershop Fee 2017/18 | 425.00 | | |
| Membership Account Balance | 2861.23 | | |
| **TOTAL** | | | **5535.66** |

| | |
|---|---|
| Prepared by:- | Reviewed By |
| Mr P Sritharan | Mr V Ilansei |
| Treasurer | Chairperson |
| 26.04.2017 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VELANAI ONRIYUM -UK - Velanai Branch

**ACCOUNTS FOR THE PERIOD FROM 18.4.2016 TO 26.04.2017**

| | SL Rs | SL Rs | SL Rs |
|---|---|---|---|
| **Balance BF 18.4.2016** | | | **41,302.19** |
| **Money Received From VO-UK** | | | |
| 21.06.2016-Received from UK £2000 | 411,272.35 | | |
| 11.07.2016-Received from UK £1000 | 187,225.84 | | |
| 22.09.2016-Received from UK £1300 | 246,000.00 | | |
| 18.10.2016-Received from UK £600 | 104,218.63 | | |
| 09.01.2017-Received from UK £1500 | 269,057.35 | | |
| 21.03.2017-Received from UK £1500 | 274,631.89 | | |
| 24.04.2017-Received from UK £4200 | 806,658.75 | | |
| **(Total Transfer £12100)** | | | |
| 02.04.17 Hospital Project Money Banked | 20,000.00 | | |
| 19.04.17 Hospital Project Money Banked | 100,000.00 | | |
| 19.04.17 Hospital Project Money Banked | 50,000.00 | | |
| **Net Intererest Received** | 4,544.95 | | |
| | | 2,473,609.76 | |
| **Total Expenses** | | | |
| Rent (Feb16-Jan17 5000 x12) | 60,000.00 | | |
| Rent (Feb17-Jan18 5000 x12) | 60,000.00 | | |
| Office Refurbished Expenses | 57,190.00 | | |
| Office Opening Cermony expenses | 15,326.00 | | |
| Computers ( 5 New + 1 Usedone) | 289,000.00 | | |
| Computer Desks , Chairs & Benchs | 46,200.00 | | |
| Mobile Phone for Office admin | 17,690.00 | | |
| Total Electricity (Apr16 to Mar 17) | 7,086.00 | | |
| WIFI & Rooter | 5,584.90 | | |
| Petty Cash expenses - Apr16(Include Phone Card) | 9,648.00 | | |
| Computer Certificates Function Expenses | 1,950.00 | | |
| Administration Staff Allowance(July 16-March 17) | 77,500.00 | | |
| Computer Tution Fees - Batch 1 (July 16-Dec 17) - Diploma In Office Management | 70,000.00 | | |
| Computer Tution Fees - Batch 2 (Jan 17 -Apr 17) - Diploma In Office Management | 48,750.00 | | |
| (Tution Fee Rs 65000 and paid upto Maech Rs 48750) | | | |
| Computer Tution Fees - Batch 1 (Jan 17 -Apr 17) - Desktop Publishing | 48,750.00 | | |
| (Tution Fee Rs 65000 and paid upto Maech Rs 48750) | | | |
| Pension (Apr16-Mar17, 12m onths, 9 people , Rs 2000 p/m) | 216,000.00 | | |
| Temple Teachers Allowance-Mar.17 | 2,000.00 | | |
| School Shoes | 70,325.00 | | |
| Roof Help | 225,000.00 | | |
| Eye Operation | 10,123.00 | | |
| | | 1,338,122.90 | |
| Net Movement for the period | | | 1,135,486.86 |
| **Balance c/fwd as at 18/04/2016** | | | **1,176,789.05** |
| **Represented by:-** | | | |
| Bank Saving Account as at 26.04.17 | 1,103,631.95 | | |
| Bank Current Account as at 26.04.17 | 72,157.10 | | |
| Cash In Hand | 1,000.00 | | |
| Total | | | **1,176,789.05** |

**Prepared by:-**
Mr V Ilansei AFA, MIPA
VO-UK Chairperson

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VELANAI ONRIYUM -UK YOUTH ORGANISATION

## INCOME AND EXPENDITURE ACCOUNT

**SPORTS DAY-18.09.2016**

| | | £ | £ |
|---|---|---|---|
| INCOME:- | | | |
| Sponsorship Money | | 1300.00 | |
| | **Donation (£)** | | |
| Ragulan and Family | 150 | | |
| Mrs Amirtha Thankarajah (Arit Express Ltd) | 100 | | |
| Mr Baheerathan | 100 | | |
| Mr Kanagaratnam Krishnakumar | 100 | | |
| Mr Hariraman | 100 | | |
| Mr Sivakaran Kunarathnam | 100 | | |
| Amrine | 50 | | |
| Mr & Mrs Jegatheeswaran | 50 | | |
| Mr Ravindraanandan | 100 | | |
| Mr Jayakumaran | 100 | | |
| Mr Selvanathan | 100 | | |
| Mr Rajeev Arularramuthan | 150 | | |
| Mr and Mrs Navaranjan | 100 | | |
| | **1300** | | |
| Ticket Sales | | 642.00 | |
| Meals,Shorteats & Drinks Sales | | 785.11 | |
| **TOTAL INCOME** | | | **2727.11** |
| EXPENDITURES | | | |
| Ground Rent | | 400.00 | |
| Banner | | 33.06 | |
| Medals | | 146.85 | |
| Drinks etc | | 35.00 | |
| Meals (Kottu Rotti) | | 137.50 | |
| Ticket Printing | | 35.00 | |
| Sundries | | 91.57 | |
| **TOTAL EXPENDITURE** | | | **878.98** |
| **SURPLUS** | | | **1848.13** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VO-UK YOUTH ORGANISATION

## DINNER & DANCE-21.01.2017

### INCOME AND EXPENDITURE ACCOUNT

| | £ | £ | £ |
|---|---|---|---|
| **INCOME** | | | |
| Total Ticket Sales | | | |
| 113 Single Tickets(113 Adults) 113* 12.50 | 1412.50 | | |
| 9 Family Tickets(18 Adults & 17 Children) 9*35 | 315.00 | | |
| | | 1727.50 | |
| Raffle Ticket Sales | | | |
| | | 159.80 | |
| **TOTAL INCOME** | | | **1887.30** |
| **EXPENSES** | | | |
| Hall Rent | | 320.00 | |
| Meals | | 700.00 | |
| Ticket Print | | 40.00 | |
| Plates , cubs, tissues & Spoon etc | 52.83 | | |
| Drinks etc | 78.12 | | |
| Tin Milk, Coffee etc | 17.19 | | |
| | | 148.14 | |
| DJ | 250.00 | | |
| Decoration | 200.00 | | |
| Banner | 37.98 | | |
| Sweets | 10.00 | | |
| Glass & Table Cover | 6.75 | | |
| | | 504.73 | |
| **TOTAL EXPENSES** | | | **1712.87** |
| **SURPLUS** | | | **174.43** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VO-UK Youth Activities in UK



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VO-UK Youth Activities in UK




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மேம்பாட்டுப் பணியில்
# வேலணை ஒன்றியம் - பிரித்தானியா

**பேராசிரியர், பொன். பாலசுந்தரம்பிள்ளை** - P.hd Durham
(சிரேஷ்ர தகைசார், வாழ்நாட் பேராசிரியர் /முன்னாள் துணைவேந்தர்)

திரு. வேந்தனார் இளஞ்சேய் அவர்கள் பிரித்தானியாவில் வாழும் வேலணை மக்களை ஒன்று திரட்டி, யுத்தத்தாலும், இடம்பெயர்வாலும் பாதிக்கப்பட்ட தனது பூர்வீக கிராமமான வேலணையை மீள் அபிவிருத்தி, புனர்வாழ்வு செய்வது பற்றிய அவரின் சிந்தனையின் வெளிப்பாடே வேலணை ஒன்றியம் - பிரித்தானியா ஆகும். இவ் ஒன்றியம் இன்று நான்காவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது.

கடந்த மூன்றாண்டு காலப் பகுதியில் வேலணையில் நலிவுற்ற, வறுமைக்குட்பட்ட, புறந்தள்ளப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்கு பல்வேறு வாழ்வாதாரவுதவிகள், வலுவூட்டல் செயற்பாடுகள், காருணிய சேவைகள் முதலியவற்றை ஒன்றியம் செய்து வந்துள்ளது.

மிகவும் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு வீடு அமைக்க ரூபா. 225,000 நிதியுதவி செய்துள்ளது. மேலும் மக்கள் வாழ்வாதார மேம்பாட்டுச் செயற்பாட்டில் கோழிகள், கோழிக்கூடுகள், தையல் இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்திரம், துவிச்சக்கர வண்டிகள் என்பன வழங்கப்பட்டன. மற்றும் மக்களின் பாவனைக்குரிய ஆடைகளும் கொடுக்கப்பட்டன. கண் பார்வை இழந்த பெண் ஒருவரின் துன்ப நிலையை அறிந்து, அவரின் கண்சிகிச்சைக்குரிய நிதி முழுவதையும் வழங்கி, அவர் மீளவும் கண் பார்வை பெற அரும் பெரும் சேவையை ஒன்றியம் செய்துள்ளமை மிகவும் பெருமைப்படக் கூடியதொரு விடயமாகும்.

வேலணை இளைஞர் / யுவதிகளுக்கு கணனி அறிவை வழங்கும் பொருட்டு, வங்களாவடி கூட்டுறவு நிறுவனத்தில், கணனி மையம் ஒன்று அமைக்கப்பட்டு, கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது வரை 20 க்கு கூடிய உள்ளூர் பிள்ளைகள் இவ் மையத்தில் கற்கைநெறியை பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றுள்ளனர். இக்கற்கைநெறியை பூர்த்திசெய்தவர்கள் தமது உயர் கல்விக்கும், வேலை வாய்ப்பிற்கும், நாளாந்த கணனி கையாட்சிக்கும் இக்கற்கை பயன்படுவதாக மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

வங்களாவடி, முருகன் ஆலய அருகில் அமைந்துள்ள முன்பள்ளியில் கழிவறை வசதி தரக்குறைவாக இருப்பதைக் அறிந்து இவ் ஒன்றியம் கழிவறை அமைப்பதற்கு ரூபா. 180,000 நிதியுதவி செய்துள்ளது.

மேலும் வேலணை அரச மருத்துவ மனைக்கு ரூபா. 942,000 பெறுமதியான மருத்துவ உபகரணங்களை அன்பளிப்புச் செய்வதான நடவடிக்கைகளில் ஒன்றியம் ஈடுபட்டுள்ளது.

இத்தகைய காலத்தில் தேவைக்கு ஏற்ப நற்பணிகளை ஆற்றி, வரும் வேலணையைச் சேர்ந்த - புலம் பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் மக்களின் மண் பற்றும், மக்களின் பற்றும் பாராட்டுக்குரியவையாகும். இவ் ஒன்றியத்தின் உதவியைப் பெறும் வேலணையூர் பயனாளிகள் தாம் பெற்ற உதவிகளை உரிய முறையில் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற்றம் காண்பதுவே அவர்கள் செய்யும் நன்றிக்கடனாகும். ஒன்றியத்தின் உதவிகள் சமூகத்தை மேம்படுத்தவும், வலுவூட்டவும், தற்சார்புத் தன்மையை உயர்த்தவும் வழிவகுக்கின்றன.

ஆக்கபூர்வமான சிறந்த பணிகளை ஆற்றி வரும் வேலணை ஒன்றியம் - பிரித்தானியா, திரு. வேந்தனார் இளஞ்சேய் தலைமைத்துவத்தில் மேன்மேலும் வளர்ந்து, ஊரின் சிறப்பை மேம்படுத்தும் என்பது எம் யாவரது நம்பிக்கையாகும்.

வாழ்க, வளர்க உம் பணி.

நன்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2017 தரவின் படி வேலணையில் உள்ள (J/12 – J/21) மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை விபரம்**

| Division No | No of family | Male | Female | Total |
|---|---|---|---|---|
| J/12 | 139 | 201 | 203 | 404 |
| J/13 | 157 | 258 | 270 | 528 |
| J/14 | 316 | 552 | 565 | 1117 |
| J/15 | 127 | 169 | 213 | 382 |
| J/16 | 158 | 271 | 263 | 534 |
| J/17 | 333 | 521 | 622 | 1143 |
| J/18 | 125 | 207 | 200 | 407 |
| J/19 | 300 | 487 | 453 | 940 |
| J/20 | 107 | 155 | 188 | 343 |
| J/21 | 158 | 251 | 268 | 519 |

மேலுள்ள 2017ம் ஆண்டின் தரவின் படி J/12 – J/21 க்கான கிராம சேவைக்கு உட்பட்ட

- ❖ மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை = 1920
- ❖ மொத்த ஆண்களின் எண்ணிக்கை = 3072
- ❖ மொத்த பெண்களின் எண்ணிக்கை = 3245

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணைக் கிளைத் தலைவரின் செய்தி

வேலணை ஒன்றியம் - பிரித்தானியாவின் 4வது ஆண்டு மலருக்கான வாழ்த்துச் செய்தி அனுப்பவதில் பெரு மகிழ்வு அடைகின்றேன்.

பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் வேலணை ஒன்றியம் - பிரித்தானியா, புலம் பெயர்ந்து பிரித்தானியாவில் வாழுகின்ற எம் உறவுகளின் தொடர்ந்த பங்களிப்புடன், அதன் கிளை நிறுவனமான வேலணை ஒன்றியம் - பிரித்தானியா - வேலணை கிளையூடாக 2016ம் ஆண்டு தமக்கென ஒரு அலுவலகத்தை திறந்து வறிய மாணவர்களுக்கான கணனி வகுப்புக்களை ஆரம்பித்து சிறப்பாக நடாத்தி வருகின்றது. முதல் தொகுதி மாணவர்களுக்கான (22) சான்றிதழ்கள் வழங்கப்பட்டு அவர்கள் அதில் மேலதிக தேர்ச்சிகளை பெறுவதற்கு பயிற்சிகள் இடம் பெறுகின்றது. அதனைத் தொடர்ந்து 2ம் தொகுதி மாணவர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் என 3 வகுப்புக்கள் நடை பெறுகின்றன.

இவற்றை விட மாதாந்த உதவித்தொகை 9 பயனாளிகளுக்கு மாதாந்தம் ரூபா. 2000/= வீதம் 2 வருடங்களாக வழங்கப்பட்டு வருகின்றது. சரஸ்வதி வித்தியாலயத்தின் மாணவர்களுக்கான இலவச சப்பாத்து விநியோகத்திற்கு ரூபா. 70,325/= வழங்கப்பட்டது. வேலணை நரசிங்க வைரவர் கோவில் அறநெறி வகுப்புக்கான ஒரு ஆசிரியர் கொடுப்பனவு மேற்கொள்ளபடுகின்றது. மற்றும் மத்திய சிறுவர் முன்பள்ளி மாணவர்களுக்கான ஆண் பெண் இருபாலருக்கான ரூபா. 1,80,000 பெறுமதியான மலசலகூடத்தை கட்டிக் கொடுப்பதற்கு பிரித்தானியா தலைமை முடிவெடுத்துள்ளது.

மேலும் வேலணை 9ம் வட்டாரத்தைச் சேர்ந்த அதாவது கடந்த போரில் ஐந்து பிள்ளைகளை இழந்த ஒரு பெண்மணிக்கு வீட்டுக் கூரை போடுவதற்காக ரூபா. 2,25,000/= நிதி உதவி வழங்கப்பட்டது. மற்றும் வேலணை 2ம் வட்டாரத்தைச் சேர்ந்த 72 வயதுடைய மூதாட்டி ஒருவருக்கு கண் சத்திரசிகிச்சை செய்யப்பட்டு இரு கண்பார்வையும் கிடைக்கப் பெற்றன.

பிரித்தானியாவில் இருந்து வந்த உறுப்பினர்கள் வேலணை பிரதேச வைத்தியசாலையை பார்வையிட்டு தங்களால் இயன்ற நிதி உதவியை தாய்ச்சங்கத்தின் ஒப்புதலுடன் செய்வதாக கூறி சென்றுள்ளனர். இதன் அடுத்த கட்டமாக வேலணை பிரதேச வைத்தியசாலைக்கு அவசர உபகரணங்கள் வாங்கிக் கொடுக்கும் முகமாக ரூபா. 9,42,000/= பெறுமதியான உதவிகளை வழங்க வேலணை ஒன்றியம் பிரித்தானியா தலைமை முடிவெடுத்துள்ளது.

ஒன்றியத்தின் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

நன்றி.

ந. ஜெகநாதன்
தலைவர்
வேலணை ஒன்றியம் - பிரித்தானியா - வேலணைக் கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய சிறுவர் முன்பள்ளி
# CENTRAL CHILDREN PRE-SCHOOL

வங்களாவடி
வேலணை.

Reg: NP/PS/J/15/VE/016

Vankalavaddy
Velanai.

22-04-2017

மதிப்புக்குரிய
வேலணை ஒன்றியம்
பரிந்தாகிய தலைவர்
அவர்கட்கு.

எமது முன்பள்ளியில் மலசல கூட வசதி இல்லாமையினால் மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் சிரமத்தினை எதிர் நோக்குகின்றனர். எங்கள் வேண்டு கோளுக்கு அமைய முன்பள்ளிக்கு மலசல கூடம் கட்டுவதற்கு நிதியுதவி பெற்றுக்கொடுத்த முன்பள்ளி நிர்வாகத்தினர் மாணவர்கள் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றனர். அத்துடன் 4ம் வருட மலருக்கான வாழ்த்துக்களை -யும் தெரிவிக்கின்றோம்.

முன்பள்ளி ஆசிரியர்கள்.
அ. சசிகா
தி. கார்த்திகா.

தலைவர்

அ. சசிகா.
செயலாளர்

ம. அனுஜா தேவி.
பொருளாளர்.

CENTRAL CHILDREN PRE-SCHOOL
Regd. No. NP/PS/J/15/VE/016
Vankalavady, Velanai.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச வைத்தியசாலை - வேலணை
# Divisional Hospital - Velanai
# ප්‍රාදේශීය රෝහල - වේලනයි

தொலைபேசி(பொது) Tel (General) දුරකථන(ප) +94 21 221 1556    E-mail: dh.velanai@gmail.com


எனது இல / My No / මගේ අංකය ........................................

திகதி / Date / දිනය 25/04/2017

திரு.வேந்தனார் இளஞ்சேய்
தலைவர்
வேலணை ஒன்றியம்–பிரித்தானியா

**வேலணை பிரதேச வைத்தியசாலை செயற்திட்டம்**

அன்புடையீர்,

எமது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைபிரிவு துரிதமாக இயங்குவதற்கு ஆக்க பூர்வ சிந்தனையுடன் மிகவும் பயனுள்ள நன்கொடையை நீங்கள் எமது வைத்தியசாலைக்கு வழங்கியமைக்கு நன்றி நவில்கின்றோம்.

| | | |
|---|---|---|
| Cardiac monitor(Mindray Imec 10) | Rs245000*3 | 735000.00 |
| Emergency bed | Rs55000*3 | 165000.00 |
| Spot lamp(surgical) | Rs14729*1 | 14729.00 |
| Mayo instrument tray stand | Rs15300*1 | 15300.00 |
| Total | | 930029.00 |

மேற்குறிப்பிட்ட உதவிகளை எமது வைத்தியசாலைக்கு வழங்கி எமது வைத்தியசாலையினால் வழங்கப்படும் சேவையை தரம் உயர்த்துவதில் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்கு நன்றி.
தீவகத்தின் மத்தியில் வேலணை பிரதேச வைத்தியசாலை இருப்பதால் இது தரம் உயர்த்தப்படுவது மிகவும் அவசியமாகின்றது. இதற்கு வைத்தியசாலை நிர்வாகம், அரசாங்கம், தனியார் நிறுவனங்கள் மற்றும் நலன் விரும்பிகளுடன் இணைந்து எதிர் வரும் காலங்களிலும் பல செயற்றிட்டங்களை செய்ய இருக்கின்றது. அவற்றிற்கு உங்களது உதவிகளை வழங்கி உங்கள் ஊரின் வைத்தியசாலை உங்கள் ஊர் மக்களுக்கும் தீவக மக்களுக்கும் சிறந்த வைத்திய சேவையை வழங்குவதற்கும் இப்பிரதேசத்தின் முதன்மை வைத்தியசாலையாக வருவதற்கும் வழி வகுப்போம்.

அத்துடன் உங்களது ஒன்றியம் தனது நான்காவது அகவை நிவைறவு விழாவை 29.04.2017அன்று சிறப்புடன் கொண்டாடுவதற்கும் உங்கள் சமூக ஆர்வத்துடனான சேவை தொடர்வதற்கும் வேலணை பிரதேச வைத்தியசாலை நிர்வாகம் சார்பாக மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

Dr.J.Thaneshkumar
மாவட்ட வைத்திய அதிகாரி
பிரதேச வைத்தியசாலை வேலணை

Dr.P.R.Sylvester
வைத்திய அதிகாரி
பிரதேச வைத்தியசாலை வேலணை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

| | | | |
|---|---|---|---|
| 01. | மங்கல விளக்கேற்றல் | | |
| 02. | அகவணக்கம் | | |
| 03. | செந்தமிழ்த்தாய் வாழ்த்து | - | செல்வி சங்கவி ஜெகதீஸ்வரன் |
| 04. | வரவேற்புரை | - | திருமதி கலைவாணி அருளன் |
| 05. | பாடல்கள் | - | திரு. ரவி & கஜன் பாலச்சந்திரன் |
| 06. | பொருளாளர் உரை | - | திரு. பொன்னம்பலம் சிறீதரன் |
| 07. | பாடல்கள் | - | திரு. ரவி & கஜன் பாலச்சந்திரன் |
| 08. | பிடில் | - | செல்வி தர்சினி கங்கைநாதன் |
| 09. | பாடல்கள் | - | திரு. ரவி & கஜன் பாலச்சந்திரன் |
| 10. | மிருதங்கம் - பிடில் | - | செல்வன் றொசியன் செந்தில்நாதன் |
| | | | செல்வன் வினோயன் செந்தில்நாதன |
| 11. | விசைப்பலகை | - | செல்வன் பிரயன் கஜன்ராய் |
| 12. | நடனம் | | செல்விகள் அயிநெயா, அஸ்விதா கலைவேந்தன் |
| 13. | செயலாளர் உரை | - | திரு. தியாகராசா கலைவேந்தன் |
| 14. | பிடில் | | செல்வன் தரங்கீத் சுதாகரன் |
| 15. | நடனம் | | செல்வி அபிநெயா கலைவேந்தன் |
| 16. | நடனம் | - | செல்விகள் லயிற்றா-சயிற்றா பிரேமகாந்தன் |
| 17. | பாடல்கள் | | திரு. ரவி & கஜன் பாலச்சந்திரன் |
| 18. | நடனம் | | செல்வி அயிநெயா கலைவேந்தன் |
| 19. | தலைவர் உரை | - | திரு. வேந்தனார் இளஞ்சேய் |
| 20. | பாடல்கள் | | திரு. ரவி & கஜன் பாலச்சந்திரன் |
| 21. | நடனம் | - | செல்வி அஸ்விதா கலைவேந்தன் |
| 22. | நன்றியுரை | - | திருமதி சிந்து கயன்ராஜ் |
| 23. | பரிசளிப்பு | | |
| 24. | உணவு-பாடல் வேளை | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Velanai Onriyum – UK,
# $4^{th}$ Year Annual Kalai Vizha

**$29^{th}$ April 2017, Saturday (5.30 – 10.50pm)**

| | | |
|---|---|---|
| 1. Lighting of the Traditional Lamp | | |
| 2. One Minute Silence | | |
| 3. Vocal – Senthamil Thai Vazhthu | - | Miss Sangkavie Jegatheeswaran |
| 4. Welcome Speech | - | Mrs Kalaivani Arulan |
| 5.Songs | - | Ravi & Kajan Balachandran |
| 6. Speech by Treasurer | - | Mr Ponnampalam Sritharan |
| 7. Songs | - | Ravi & Kajan Balachandran |
| 8. Violin | - | Miss Tharsini Kangainathan |
| 9. Songs | - | Ravi & Kajan Balachandran |
| 10. Miruthangam & Violin | - | Rosiyan & Viniyan Senthilnathan |
| 11. Keyboard | - | Master Prajan Kajanrajh |
| 12. Dance | - | Ajeneya/Asvitha Kalaiventhan |
| 13. Speech by Secretary | - | Mr Thiyagarasa Kalaiventhan |
| 14. Violin | - | Master Tharenkeeth Suthakaran |
| 15. Dance | - | Miss Abhineya Kalaiventhan |
| 16. Dance | - | Miss Lajita & Sajita Premakanthan |
| 17. Songs | - | Ravi & Kajan Balachandran |
| 18. Dance | - | Miss Ajeneya Kalaiventhan |
| 19.Speech by Chairperson | - | Mr Venthanar Ilansei |
| 20. Songs | - | Ravi & Kajan Balachandran |
| 21. Dance | - | Miss Asvitha Kalaiventhan |
| 22. Vote of Thanks | - | Mrs Chindu Gajanraj |
| 23.Presentation | | |
| 24. Dinner / Songs | | |

End

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

*Mr & Mrs. Yoganathan*

**JP & S Services Ltd**

Texaco Weyhill Road, Weyhill, Andover, Hampshire SP11 0PH

Tel: 00 44 (0) 1264 771 911, Fax: 00 44 (0) 1753 630 792

With best Compliments from....

**B&P Enterprises Ltd**

361 Watling Street, Radlett, Hertfordshire WD7 7LB,

Tel: 00 44 (0) 1923 854 636, Fax: 00 44 (0) 1753 630 792



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்
# J/VELANAI SARASWATHY VIDYALAYAM

PRINCIPAL ( SLPS )
Mr.R.Jeyaharan –(B.com , PGDE(Dis),PGDSNE,NDT)

DUPUTY PRINCIPAL (SLPS)
Mr.T.Sathyabalan ( B.A, Dip.in.School manegment)

Vankalavady -Velanai
வங்களாவடி -வேலணை

Reg:No:-
Estd:-
☎:-0214925420
✉:-srasvathyvid@gmail.com

Date :- 25|04|2017

தலைவர்
பிரித்தானிய ஒன்றியம்
வேலணை,

பாராட்டி வாழ்த்துகின்றேன்.

தங்கள் ஒன்றியத்தினால் வேலணை பிரதேச மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளிற்கு ஆற்றி வரும் சேவையினை பாராட்டுகின்றேன். மேலும் எமது பாடசாலையின் செயற்பாடுகளிற்கு உதவிபுரிவதுடன் இந்த ஆண்டு எமது மாணவர்களிற்கான சீருடைகளை வழங்கியமையிட்டு நன்றி தெரிவிப்பதுடன். தங்கள் சேவை தொடரவும் ஒன்றியம் சிறப்பாக செயல்படவும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

அதிபர்.
**Mr.R.Jeyaharan**
Principal
J/Velanai Saraswathy Vidyalayam
Velanai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணை ஒன்றியம் - பிரித்தானியா , கடந்த ஒரு வருடமாக வேலணையில் நடாத்தி வரும் செயற்பாடுகளும் அதற்கு - உதவியோர் விபரங்களும்

### இலவச கணனி வகுப்புக்கள் - ஆரம்பம் (17/07/2016)

வேலணையில் இயங்கி வரும் எமது செயலகத்தில் , வேலணையில் வாழ்ந்து வரும் , பாடசாலை படிப்பை முடித்து வேலை தேடி கொண்டிருக்கும் இளையோர்க்கான Diploma In Office Management Course கடந்த July - 16 தொடங்கப்பட்டு 30 மாணவர்கள் கல்வி கற்றார்கள். இவ் 4 மாத Course 2016 மார்கழி முடிக்கப்பட்டு 22 மாணவர்கள் பரீட்சை சான்றிதழ்கள் பெற்றார்கள்.

தொடர்ந்து எம்மால் அங்கு Jan-17 இருந்து April-17 வரை நடத்தப்படும் Desktop publishing course இற்கு தற்சமயம் 19 மாணவர்கள் படித்து வருகின்றார்கள்.

மேற்கண்ட இந்த இரு course இற்கான பரீட்சைகள் விரைவில் நடாத்தப்படவுள்ளன. இவர்களுக்கான பரீட்சைச் சான்றிதழ்கள் வரும் June மாத நடுப்பகுதியில் வழங்கப்படும்.

இத்துடன் அல்லாது பாடசாலை மாணவர்களுக்கான இலவச கணனி வகுப்புக்களும் கடந்த Jan -17 இருந்து நடாத்தப்பட்டு வருகின்றது. இதில் 12 வயதிற்கு உட்பட்ட வயதில் 19 மாணவர்களும் , 12 வயதிற்கு மேற்பட்ட வயதில் 27 மாணவர்களும் பயின்று வருகின்றார்கள்.

பெரியவர்களுக்கான கணனி வகுப்புகள் திங்கள் - புதன் - வெள்ளி நாட்களில் 9 மணி முதல் 11 மணி வரை நடாத்தப்படுகின்றது. பாடசாலை மாணவர்களுக்கான கணனி வகுப்புக்கள் திங்கள் -செவ்வாய் - புதன் - வெள்ளி - சனி நாட்களில் அதாவது மாலை 3.15 மணி முதல் 5.00 மணி வரையும் சனி காலை 9 மணி முதல் 12 மணி வரை நடாத்தப்படுகின்றது.

நாம் எம் வேலணை செயலகத்தில் எம் அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல - சமூக சிந்தனையோடு செயற்பட ஒருவரை நியமித்துள்ளோம்.

இக் கணனி வகுப்புக்களுக்கான செலவுகள் - கட்டிடச் செலவுகள் , இதர செலவுகளை நாம் எம் ஒன்றிய அங்கத்தவர்கள் , ஊர் உறவுகள் , தமிழ் நண்பர்கள் ஆகியோரின் உதவியுடன் நடாத்தி வருகின்றோம்.

இதற்கு, எமக்கு எமது இளையோர் அமைப்பு தாம் நடாத்திய “விளையாட்டு விழா” மூலம் சுமார் ரூபா. 150,000 தந்துள்ளார்கள். (£848/13) மேலும் எமக்கு இங்குள்ள வேலணை வர்த்தகரான திரு. மயூரநாதன் அவர்கள் கடந்த 3ம் ஆண்டு விழாவில் £230 (£300-£70) உம் , மற்றும் Birmingham இல் தொழில் நடாத்தி வரும் திரு. சர்வானந்தன் £300 உம் (£325 -£25) வேலணையூர் வர்த்தகரான திரு. நடாமோகன் அவர்கள் £250 உம் (£265- £15) மற்றும் Ilford ஐச் சேர்ந்த திரு. சிவா அவர்கள் £100 தந்திருந்தார்கள். மேலும் எம் 3ம் ஆண்டு (23/04/2016) கலை விழாவில் கிடைத்த நிகர உரிமத்தொகையையும் கலைமகள் விழா (29/10/16) கிடைத்த நிகரத் தொகையும் இவ் செலவுகளிற்கு பாவிக்கப்பட்டது. ரதி நகைக்கடையினர் £1260 நன்கொடைதந்திருந்தார்கள். இவ்வாறு வேலணையைச் சார்ந்த அனைத்து மக்களுக்குமான இலவசக் கணனி வகுப்புகளுடன் நாம் தனிப்பட்ட நபர்களுக்கும் , தனிப்பட்ட தாபனங்களுக்கும், உதவி கோரப்பட்ட நிலையில் இவ்வுதவியை அவ்வவ் வட்டாரத்தைச் சேர்ந்த , புலம் பெயர்ந்து வாழ்கின்ற வேலணை உறவுகளை கேட்டுச் செய்திருந்தோம். இந் நிலையில் வேலணை அல்லாத எம் தமிழ் உறவுகளில் சிலரும் இவ்வாறான எம் நற்பணிக்கு தம் உதவிகளை வழங்கியிருந்தார்கள்.

அவ்வாறு செய்யப்பட்ட உதவிகளையும் - அவ்வுதவிகளுக்கு பணங்கொடுத்து உதவியோர் விபரங்களையும் நாம் இங்கு பிரசுரித்துள்ளோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண் சத்திரச்சிகிச்சை உதவி (Rs.10,123)**

வேலணை 2ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி. அன்னம்மா நடராசா என்ற 72 வயது பெண்மணிக்கு இரு கண்களும் தெரியாதிருந்த நிலையில் - சத்திரசிகிச்சை செய்யப்பட்டு இரு கண் பார்வையும் கிடைக்கப் பெற்றன. இதற்கான செலவு ( தனியார் வைத்தியசாலையில் செய்வதாயின் சுமார் Rs 150,000 முடிந்திருக்கும்.) ரூபா. 10,123 மட்டுமே முடிந்தது. இவ்வுதவியைச் செய்த வைத்தியர் மலரவன், செயலாற்றிய நண்பர் கேசவன் ஆகியோருக்கும் எம் நன்றிகள். இதற்காக எமக்கு இங்கு வாழும் எம் ஊர் வர்த்தகரான திரு. ஜெயகுமாரன் அவர்கள்(Wine Mart , HN & WM LTD) £300 தந்திருந்தார்கள். மிகுதியான ரூபா. Rs.44,000 எமது கணனி கல்விக்கான செயற்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

**வீட்டுக் கூரை உதவி (Rs. 2,25,000)**

வேலணை பிரதேச செயலாளர் அவர்கள் எமக்கு, இருவருக்கு வீட்டுக்கூரை போட உதவும் படி கேட்டு கடிதம் அனுப்பியிருந்தார். இதில் நாம் ஒருவரை, எமக்குக் கிடைத்த தகவல் அடிப்படையில் தெரிவு செய்தோம். இவர் வேலணை 9ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி. தவநாயகி சிவகுமார் ஆகும். இவர் போர்க்காலத்தில் தனது 5 ஆண் பிள்ளைகளை பறிகொடுத்து சிரமமான நிலையில் வாழ்ந்து வருகின்றார். இவரிற்கான உதவியை நாம் அப்பகுதியை அண்மித்து இங்கு வாழும் அன்பர்களைக் கேட்க எண்ணியுள்ள வேளை - திரு. திருநீலகண்டன் (Lakshmis Jewellers) பெரு மனதோடு தாமாகவே முன்வந்து £1150 ஐ தந்து உதவினார். இது அன்றைய நேரத்தில் Rs. 210,000 ஆக இருந்தது. மீதி பணத்தை நாம் போட்டு ரூபா Rs. 225,000 இற்கான இவ் உதவியை செய்து கொடுத்தோம்.

**வேலணை சரஸ்வதி பாடசாலை - இலவச காலணி உதவி**

பாடசாலை அதிபர் எமக்கு வறிய நிலையிலுள்ள 72 மாணவர்களுக்கு இலவச காலணி கொடுத்து உதவும்படி கேட்டிருந்தார். இதற்கு சுமார் Rs. 72,000 செலவு வருமென நாம் தகவலைத் திரட்டினோம். இதற்காக £400 உதவியை நாம் எம் வேலணை உறவுகளிடம் கேட்டோம். பின்வருவோர் உதவினர்.

| | | |
|---|---|---|
| 1. | செல்வி. சோபி சிவச்சந்திரன் | £200 |
| 2. | திரு. செல்லத்துரை சதீசன் | £100 |
| 3. | திரு. சுப்பிரமணியம் சர்வானந்தன் | £100 |

இதன் மூலம் நாம் 88 மாணவர்களுக்கு காலணிகள் வழங்கியிருந்தோம். மொத்தச் செலவு Rs. 70,325 முடிந்தது.

**வேலணை - நரசிங்க வைரவர் அறநெறி பாடசாலை**

மேற்படி அறநெறி பாடசாலை மூலம் மாணவர்களுக்கு பண்ணிசை படிப்பிக்கப்படுகின்றது. இரு ஆசிரியர்கள் வாரத்தில் இரு நாட்கள் இப்பண்ணிசையைப் பயில்விக்கின்றார்கள். இவர்களுக்கான உதவிப்பணம் ஒரு வருடத்திற்கு மாதாந்தம் தலா Rs, 1000 கொடுக்க சம்மதித்தோம். இதற்கான உதவியை இங்கு வாழ்கின்ற திரு. புவனேஸ்வரி சிவசந்திரன் அவர்கள் £140 தந்து உதவியுள்ளார்கள். இக்கொடுப்பனவு Mar- 17 தொடங்கி Feb- 18 வரை கொடுக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலணை மத்திய சிறுவர் முன்பள்ளி**

இப் பாடசாலை எம் ஆரம்ப காலத்தில் தாம் நடாத்தி வந்த இல்லத்தில் எம் நிகழ்வுகளை நடாத்த இடம் தந்திருந்தனர். இவர்களுக்கு அண்மையில் - வேலணை முருகன் ஆலயத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட காணியில் அரசாங்கம் ஒரு கட்டிடம் கட்டிக் கொடுத்துள்ளது. ஆனால் சிறுவர்களுக்கான கழிவறை வசதி இல்லை. அவர்கள் எம்மிடம் இரு கழிவறைகள் (ஆண்/பெண்) கட்டித் தரும்படி கேட்டிருந்தார்கள். நாம் ஒப்புக்கொண்டுள்ளோம். இதற்கான செலவாக £1000 ஐ இங்கு வாழ்கின்ற - வேலணை ஊரைச் சாராத அன்பர் திரு. அருண் மனோகரன் அவர்கள் பெரு மனதோடு தந்துதவியுள்ளார். இம்மலசல கூடம் கட்டுவதற்கான - பிரதேச சபையின் அனுமதி பாடசாலையால் பெற முன்னெடுப்பு நடக்கின்றது. இவ் அனுமதி கிடைத்தவுடன் இவ்வுதவி நிறைவேற்றப்படும்.

**பால் மாடு தொடர்பான உதவி**

வேலணை 3ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. சிறீதரன் என்பவர் (கண் பார்வை குறைவு) எம்மிடம் உதவி கேட்டிருந்தார். இவரிற்கான உதவியாக Rs. 22,000 இற்கு பெறுமதியான பசுமாடு இலங்கையில் வசிக்கும் வேலணை ஊரைச் சேர்ந்த சமூக சேவகர் திரு. கேசவன் (துவாரகா நகை கடை உரிமையாளர்) அவரின் உதவியுடன் கொடுத்துள்ளோம்.

**வேலணை பிரதேச வைத்தியசாலை**

இவ் வைத்தியசாலைக்கான புதிய வெளிநோயாளர் பிரிவு இரு மாடிக்கட்டிடம் கடந்த 03/04/2017 அன்று திறக்கப்பட்டது. இவ் வைத்தியசாலை நிர்வாகம் Rs. 942,000 பெறுமதியான அடிப்படை வைத்திய உபகரணங்கள் வாங்குவதற்கான உதவியை எம்மிடம் கேட்டிருந்தார்கள். நாம் இதற்கு ஒப்புக்கொண்டுள்ளோம். இத்திட்டத்திற்கு பின்வருவோர் உதவியுள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| 1. | திரு. வல்லிபுரம் யோகராஜா | = £ 1000 |
| 2. | திரு. அருண் மனோகரன் | = £ 500 |
| 3. | திரு. திருமதி. விஸ்வநாதன் யோகநாதன் | = £ 500 |
| 4. | திரு. ராஜரட்ணம் மயூரநாதன் /திரு. ராஜரட்ணம் சோதிநாதன் | = £ 500 |
| 5. | திரு. திருநீலகண்டன்(Lakshmis Jewellers) | = £ 525 |
| 6. | திரு. திருமதி. ஜெகதீஸ்வரன் | = £ 300 |
| 7. | திரு. பொங்கைமாறன் | = £ 300 |
| 8. | திரு. சிவநாதன் | = £ 50 |
| 9. | திரு. செந்தூரன் | = £ 54 |
| 10. | திரு. சரவணா | = £ 54 |
| 11. | திரு. திருமதி. தியாகராசா (பொன்னண்ணா) | = £ 263 |
| 12. | திரு. பாஸ்கரன் | = £ 527 |
| 13. | VO-UK Committee -8 members @£150each | = £1200 |
| | | **= £ 5773** |

இவ் அன்பளிப்பு இலங்கைக்கு அனுப்பப்படுகையில் சுமார் 11 லட்சம் பெறுமதியாக இருக்கும். இதில் Rs. 942,000 உதவி தற்போது வழங்கப்படவுள்ளது. மீதமுள்ள பணம் அவசிய அடிப்படைத் தேவைக்காக உதவி கோரப்படுகையில் அதற்கு உபயோகிக்கப்படும்.

மேலும் கடந்த மாதம் எமக்கு சனசமூக நிலையம் ஒன்றிலிருந்தும் , பாலர் பாடசாலையிலிருந்தும் உதவி கோரி கடிதம் அனுப்பபட்டுள்ளது. நாம் இவற்றைப் பரிசீலித்த பின் இவ்வுதவிக்கான ஒழுங்குகளை செய்ய உள்ளோம்.

**எம் ஊரின் அபிவிருத்தியினூடே எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WINSOFT TECHNOLOGY
## Computer Education

Registered in Tertiary and Vocational Education Commission (P25/0064)
Registered in Socialist Republic of Sri Lanka (VS/BR/38/2009)

வேலணை ஒன்றியம் - பிரித்தானியா 4ம் ஆண்டு பூர்த்தியினை கொண்டாடுகின்றது. இந் நிறுவனம் சேவை நோக்கோடு செயற்பட்டு வருகின்றது. இந் நிறுவனத்தின் சேவை மென்மேலும் தொடர வேண்டும் என இந் நிறுவனத்தின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

வேலணை ஒன்றியம் - பிரித்தானியா நிறுவனம் ஆனது ஏழை மாணவர்களின் கல்வி செயற்பாட்டிற்கு உதவுதல், பெற்றோர்களுக்கு நிதி உதவி செய்தல், மாணவர்களுக்கான இலவச கணினிக் கல்வியினை வழங்கல், வறுமையில் வாழும் குடும்பங்களுக்கு உதவுதல், பெற்றோர்களுக்கு சத்திரசிகிச்சை செய்வதற்கு உதவி செய்தல், பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாதணிகளை வழங்கல் போன்ற பல்வேறு சேவைகளை ஆற்றி வருகின்றது.

இந் நிறுவனத்துடன் இணைந்து நாமும் ஒரு வருட காலமாக செயற்படுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

Winsoft Technology.

WINSOFT TECHNOLOGY
Computer Education
Jaffna. Sri Lanka

K.K.S Road,
Chunnakam,
Sri Lanka.

Phone :- 0217451770
E-mail :- winsoft007@gmail.com
Website :- www.winsoftlk.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணையில் நடைபெற்ற நிகழ்வுகளில் சில...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணையில் நடைபெற்ற நிகழ்வுகளில் சில...














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை ஓன்றியத்தின் இளையோர் அமைப்பு இலண்டன் தலைவர் வாழ்த்து



அன்புடையீர் வணக்கம்

நம் நாட்டின் ஏற்பட்ட அவல நிலையில் நம்பெற்றோர் நாடுவிட்டு வெளிநாட்டுக்கு புலம்பெயர்ந்தார்கள். அதன் காரணத்தால் நாம் இங்கு பிறந்தோம், வளர்ந்தோம், படித்தோம், பட்டம்பெற்றோம். ஆனால் வறுமை. அதன் கொடுமை பட்டினி அதனால் ஏற்படும் அவலம், துன்பம் என்பதை எல்லாம் நாம் கண்டதில்லை. அறிந்திருக்கிறோம் ஆபிக்ரிகா நாடுகளில் இருப்பதாய், ஆனால் தெரிந்திருக்க வில்லை ஆனால் ஈராண்டுக்கு முன்னதாக நான் எம்தாய்மண்ணுக்கு சென்றபோதுதான் பார்க்க முடிந்தது. மக்களின் அவலத்தையும், துன்பத்தையும். பட்டினியால் மக்கள் சந்திக்கும் துயரத்தையும். கண்ணால் காண முடிந்தது.நாங்கள் வாழும் வாழக்கையைப் பற்றியும் எண்ணிப் பார்த்து சிந்திக்கவும் முடிந்தது. அப்போதான் எனது இதயத்தை தொட்டது எமக்கு முன்னால் எத்தனையோ மக்கள்பணி சேவை கிடக்கிறது நாம் அதை நினைத்துப் பார்கவில்லையே! நாங்கள் என்ன ஆறறிவு கொண்ட மனித இனமா? இல்லை ஐந்தறிவு கொண்ட நாலுகால் இனமா..!? என்று சிந்தித்தேன் இந்த வேளையில்தான் வேலணை ஒன்றியமும் அதன் செயல்பாட்டு நிர்வாகிகளும், தாயக மக்களுக்கு செய்யும் பணியும். எனது இதயத்தை தொட்டது. நல்லதை செய்ய நாமும் இணைவோம் என எண்ணி நானும் இணைந்து. எனது சிந்தனையை ஏற்ற. எனது நண்பர்களையும் இணைத்து பணிதொடர் கின்றேன். இதற்கும் உங்களின் கரமே எங்களுக்கும் உதவவேண்டும் உங்களின் துணையே எங்கள் பலமாக என்றும் இருக்க வேண்டும் என அன்புடன் கேட்டு கொள்கின்றேன்

நாங்கள் ஆரம்பித்து ஒரு ஆண்டே ஆகின்றது அதற்குள் சில நிகழ்வுகளை நடத்தி உள்ளோம். எங்களை வளப்படுத்தி பலபணிகள் தொடர்வோம் என உறுதி கூறுகின்றோம்.

அன்புடன் விடைபெறும்

**ஜீவன் அருளன்**
தலைவர்
இளையோர் அமைப்பு
வேலணை ஒன்றியம்
23.04.17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேலணை ஒன்றியம் - பிரித்தானியா இளையோர் அமைப்பு செயலாளரின் செய்தி

வேலணை ஒன்றியம் - பிரித்தானியா தனது நான்காவது ஆண்டு நிறைவு விழா மலரில் வேலணை ஒன்றியத்தின் இளையோர் அமைப்பின் செயலாளரான என்னை எமது வேலைத்திட்டங்கள் மற்றும் இவ் முதல் ஆண்டில் எமது அமைப்பின் வளர்ச்சியைப் பற்றி சிலவற்றை கூறுமாறு கேட்டுள்ளனர்.

முதலில் நான்கு வருடங்களாக மிகச் சிறப்பாக இயங்கி கொண்டு வரும் வேலணை ஒன்றியம் - பிரித்தானியாவிற்கு எனது வாழ்த்துக்கள்.

"எம் ஊரின் அபிவிருத்தியினூடாகவே எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்". என்ற குறிக்கோளுக்கு ஏற்ப வேலணை ஊர்மக்களின் நன்மை கருதி பல முயற்சிகளை வேலணை ஒன்றியம் - பிரித்தானியா தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது. மேலும் வேலணை ஒன்றியம் பிரித்தானியா எமக்கும் வழிகாட்டியாக செயற்படுகின்றது.

வேலணை ஒன்றியத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவில் இளையோர் அமைப்பைத் தொடக்கி வைத்தனர். எமது இளையோர் அமைப்பு இன்று 15 அங்கத்தவர் கொண்ட அமைப்பாய் இயங்கி கொண்டு வருகின்றது. நாம் இவ் முதலாம் ஆண்டில் வேலணை ஒன்றியம் பிரித்தானியாவின் மேற்பார்வையுடன் இரு நிகழ்வுகளை சிறப்பாக நடாத்தியுள்ளோம்.

அதாவது Sunday 18th September 2016 அன்று விளையாட்டு போட்டிகளையும், Saturday 21st January 2017 அன்று Dinner & Dance உம் நன்றாக நடந்தன. ஏமக்கு இந் நிகழ்வுக்கு ஆதரவு தந்த வர்த்தக பெரு மக்களுக்கும், நன்கொடைகள் தந்த வேலணை ஊர் மக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாம் பிரித்தானியாவில் பிறந்து, வளர்ந்தாலும் எமது தாய் மொழி, எமது அடையாளம், எமது தாய் நாட்டை மறவோம். என்பதை எம் திட்டங்கள் மூலம் தொடர்ந்து காட்டி வருகின்றோம்.

வேலணை ஊர் மக்களின் வளர்ச்சிக்காக எம்மால் இயன்ற உதவிகளை நாம் தொடர்ந்து புரிவோம். அத்துடன் இங்கு வளரும் வேலணை ஊர் இளையோர்களை எம்முடன் இணைத்து, வரும் வருடங்களில் மிகவும் சிறப்பாக விளையாட்டுப் போட்டியையும், Dinner & Dance யும் போன்ற பல நிகழ்வுகளை நடாத்த உள்ளோம்.

இறுதியாக இவ் முதலாம் ஆண்டில் எமக்கு உறுதுணையாக நின்று எமக்கு உதவிய வேலணை ஒன்றியம் - பிரித்தானியாவிற்கு எமது நன்றிகள்.

**Sophie Sivachandran**
செயலாளர்
வேலணை ஒன்றியம் - பிரித்தானியா
இளையோர் அமைப்பு.
22.04.17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேலணை ஒன்றியம் பிரித்தானியா இளையோர் அமைப்பு பொருளாளரின் செய்தி.

வேலணை ஒன்றியம் பிரித்தானியா தனது நான்காம் ஆண்டு நிறைவு விழாவை இன்று சிறப்பாக கொண்டாடுகிறது. இவ்வமைப்பு கடந்த 4 வருடங்களாக தொடர்ந்து செயல்பட்டு, அதன் மூலம் வேலணையில் உள்ள வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு தங்களால் ஆன பல நன்மை பயக்கும் உதவிகளையும், சுய தொழில் சார் உதவிகளையும், கல்வி பணிக்கான உதவிகளையும் முன்நின்று செய்துள்ளமை பெருமைக்குரிய தொன்றாகும். அவ்வகையில் வேலணை ஒன்றியம் பிரித்தானியா இளையோர் அமைப்பின் சார்பாக எமது நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

மேலும் இவ் இளையோர் அமைப்பு கடந்த வருடம் உருவாக்கப்பட்டு செயல்படத் தொடங்கியது. இதன் ஆரம்ப கட்டமாக நாங்கள் விளையாட்டுப்போட்டியை 18/09/2016 இல் ஒன்று கூடி நடத்தியுள்ளோம். அவ்வகையில் எமக்கு பல வகையில், வர்தக நிறுவனங்கள், பொதுமக்கள் மூலமும், உணவு விற்பனை மூலமும் எமக்கு £1848.13 கிடைக்கப்பெற்றுது. அதில் வேலணை ஒன்றியத்தின் மூலம் செயல்படும் கணணி வகுப்புகளுக்கான செலவிற்கு £848.13 வழங்கியிருந்தோம்.

அதன்பின் வேலணை இளையோர் மற்றும் மக்களை ஒன்றினைக்கும் நோக்கத்துடன், எம் அமைப்பு இரா-போசன நடன ஒன்றுகூடலொன்றை 21/01/2017 இல் நடாத்தியுள்ளது. அதற்கு வருகை தந்து, ஆதரவு தந்துதவிய அனைவருக்கும் நன்றிகள். இதன் மூலம் எமக்கு £174 மேலதிகமாக கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்நிதிகளை நாங்கள் வேலணை ஒன்றியத்தின் எதிர்கால திட்டங்களுக்கு ஒதுக்கிக் கொடுத்துள்ளோம்.

மேலும் இதுபோன்ற நிகழ்வுகளை எதிர்காலத்தில் நடாத்தி மென்மேலும் வேலணை ஒன்றியத்தின் பணிகளுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்பதே எமது ஆவலாகும்.

ஆகவே எமக்கு இன்னும் இளையோர் அமைப்புக்கு ஆதரவாக மேலும் பல இளையோர் வந்து சேர வேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இதில் இணைத்து எமக்கு வலுச் சேர்க்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வேலணை ஒன்றியத்தின் சேவை மென்மேலும் வளர்ந்து, எம் ஊர் மக்களுக்கு சேவை செய்வதற்கு, நாமும் எமது அமைப்பும் என்றென்றும் உதவியாகவும் ஒத்தாசையாகவும் இருந்து செயல்படுவோம்.

நன்றி

**ஆருதி ஞானசம்பந்தன்**

பொருளாளர்

வேலணை ஒன்றியம் பிரித்தானியா

இளையோர் அமைப்பு

23.04.17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் நரசிங்கவைரவா

# ஸ்ரீ நரசிங்க வைரவர் அறநெறி பாடசாலை

*Sri Narasinga Vairavar Aranery School*

Ward No 1, Velanai East
Chaddy Road, Vankalavedy
Velanai.

1ம் வட்டாரம் வேலணை கிழக்கு
சாட்டி வீதி, வங்களாவடி
வேலணை.

Reg No: HA/7/56/14/267

Date: 22.04.2017.

## நன்றியறிதல்கள்

மதிப்பிற்குரிய வேலணை ஒன்றிய பிரித்தானிய தலைவர் அவர்கட்கு,

நன்றி மறப்பது நன்றன்று என்ற வாக்கிற்கு அமைவாக தங்களிற்கு நாங்கள் நன்றியறிதல்களை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். எமது அறநெறி பாடசாலையின் ஆசிரியர்களிற்கான கொடுப்பனவு தொடர்பாக நாங்கள் உங்களை நாடிய போது எந்தவித மறுப்பும் தெரிவிக்காது எமது ஆசிரியர்கள் இருவரிற்கும் மாதாந்தம் தலா 1000.00 ரூபா வீதம் வழங்கி உதவியமைக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம். எமது மாணவர்களும் ஆசிரியர்களும் என்றும் உங்கள் சேவையை நினைவு கூருவோம்.

மேலும் வேலணை ஒன்றியத்தின் நான்காவது ஆண்டு விழா மலரிற்கு எமது அறநெறிப் பாடசாலை சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். தங்கள் சேவை மேன்மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என நரசிங்க வைரவ பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

நன்றி.

செயலாளர்

பொறுப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இல :VE/DS/P/Resettle-House/2016.

பிரதேச செயலகம்,

வேலணை.

25.08.2016.

தலைவர்

வேலணை ஒன்றியம்

பிரித்தானியா

**உதவிகோரல் தொடர்பானது**

மேற்படி விடயம் தொடர்பில், துரைசிங்கம் நாகேஸ்வரி மற்றும் செல்லத்துரை விஜயதீபன் என்பவர்களது வீட்டுத்திட்ட உதவிகோரல் தொடர்பாக.

எமது பிரதேசத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற வீட்டுத்திட்டத்தில் குறிப்பிட்ட 2 பயனாளிகளில் (சரவணை கிழக்கு வட்டாரம்-9)துரைசிங்கம் நாகேஸ்வரி என்பவர் வன்செயல் காரணமாக தமது குடும்பத்தில் 5 அங்கத்தவர்களை இழந்துள்ளதுடன் கணவரை கைவிட்ட நிலையில் உள்ள பெண்பிள்ளையும் இருப்பதுடன் மிகவும் வறிய நிலையில் உள்ளார். செல்லத்துரை விஜயதீபன் (சரவணை கிழக்கு வட்டாரம்-9) என்பவர் மிகவும் நலிவுற்ற நிலையில் காணப்படுகின்றார்.

எனவே திட்டத்தில் வழங்கப்படுகின்ற உதவித்தொகையினைக் கொண்டு இவர்களால் வீட்டுத்திட்டத்தினை முழுமையாகப்பூர்த்தி செய்ய முடியாமல் காணப்படுவதால் தங்களாலா உதவியை இவர்களுக்கு வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிரதேச செயலர்

வேலணை

MRS.S.THEIVENDRAM
Divisional Secretary
Divisional Secretariat
Island South
Velanai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளர் நலன்புரிச்சங்கம் - பிரதேச வைத்தியசாலை வேலணை

# PATIENTS WELFARE SOCIETY - DIVISIONAL HOSPITAL VELANAI

රෝගී සුභසාධන සංගමය- ප්‍රාදේශීය රෝහල වේලනයි

E-mail : patientswelfaresocietyvelanai@gmail.com

T.P : 021 221 1556

பதிவு இல.
Regd no


தலைவர் | உப தலைவர் | செயலாளர் | உப செயலாளர் | பொருளாளர்

Date : 29/03/17

தலைவர்/செயலாளர்

பிரித்தானிய ஒன்றியம்

வேலணை கிளை.

அன்புடைய சேர்,

எங்களின் வேண்டுகோளுக்கு அமைய பிரதேச வைத்தியசாலையினது தேவைகளை சாதகமாக பரிசீலித்தமைக்கு மிக்க நன்றி. உங்களது கிளை உறுப்பினர்கள் எம்மை சந்தித்ததுடன் நேரடியாகவே வைத்தியசாலையின் நிலைமையையும் பார்வையிட்டனர். எனவே பின்வருவனவற்றை விலைப்பட்டியலுடன் தமக்கு சமர்பிக்குமாறு கூறியதற்கு அமைய

| | எண்ணிக்கை | | விலை |
|---|---|---|---|
| அவசர சிகிச்சைப்பிரிவு கட்டில் | 3 | X | 55000 |
| சிறு சத்திரசிகிச்சை செய்வதற்கான ஒளி கருவி(spot light) | 1 | X | 28000 |
| சத்திரசிகிச்சை செய்வதற்கான உதவி மேசை(mayos instrument troly) | 1 | X | 14000 |
| அவசர நிலமை அவதானிப்பு கருவி(cardiac monitor) | 3 | X | 245000 |

எனவே தங்களின் பொதுகூட்டத்தில் அங்கத்தவர்களின் கவனத்திற்கு சமர்பித்து சாதகமாக பரிசீலினை செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

தலைவர் ............ | செயலாளர் ............

PRESIDENT | SECRETARY

PATIENTS WELFARE SOCIETY
DIVISIONAL HOSPITAL
VELANAI

**"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய சிறுவர் முன்பள்ளி
# CENTRAL CHILDREN PRE-SCHOOL

வங்களாவடி
வேலணை.

Reg: NP/PS/J/15/VE/016

Vankalavaddy
Velanai.

---

வேலணை மேற்கு
5ம் வட்டாரம்
வங்களாவடி.

ஐயா
சம்பந்தப்பட்டவர்களுக்கு.

மலசல கூட அனுமதி கோரல்.

மேற்படி எமது முன்பள்ளி பத்து வருடங்களாக இயங்கி வருகின்றது மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டு வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே எமது முன்பள்ளிக்கு உதவ தருமர்களிடம் மலசல கூட வசதியினை ஏற்படுத்தி தரும் கேட்டோம் ஆனால் எவரும் உதவி செய்ய முன்வரவில்லை. ஆண் பிள்ளைகளுக்கு வேறு பெண் பிள்ளைகளுக்கு வேறான மலசல கூட வசதியினை ஏற்படுத்த இரண்டு கட்டம் தேவையாக உள்ளது. மலசல கூட வசதி / குடிநீர் வசதி இன்மையினால் முன்பள்ளி மாணவர்களுக்கு தொற்று நோய் பரவக் கூடிய சாத்தியக் கூறு காணப்படுகின்றது. இவ் அடிப்படை வசதியினை ஏற்படுத்தி தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

முன்பள்ளி ஆசிரியர்கள்.

அ. ஜெசிதா
தி. கார்த்திகா

H. கார்த்திகா
தலைவர்

அ. ஜெசிதா
செயலாளர்

தி. வாசுகி.
பொருளாளர்.

CENTRAL CHILDREN PRE-SCHOOL
Regd. No. NP/PS/J/15/VE/016
Vankalavady, Velanai.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணை ஒன்றியம் – பிரித்தானியா
## VALANAI ONAIYUM - UK

### நன்றி நவிலல்

எமது இன்றைய நான்காமாண்டு நிறைவு விழா சிறப்புடன் , நிறைவுடன் நடந்திட எமக்கு ஒத்துழைப்பு அளித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். சிறப்பாக எமது இவ்விழா மலருக்குத் தொடர்ந்தும் தமது விளம்பரங்களைத் தந்து எமக்குப் பேருதவியாக இருக்கின்ற எம் வர்த்தகப் பெருமக்களுக்கு எங்கள் மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். நாம் வேலணையில் நிறைவேற்றிய திட்டங்களுக்கும், இனி நிறைவேற்றவுள்ள திட்டங்களுக்கும் எமக்கு பணஉதவி செய்து சிறப்பாக நாம் பணியாற்றிட உதவிவரும் பிரித்தானியா வாழ் வேலணை மக்களுக்கும், வேலணை உறவுகளுக்கும், வேலணை அல்லாத எம் இனிய நண்பர்களுக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். எமக்கு கடந்த கால நிகழ்வுகளில் இலவசமாக சுவையான உணவை வழங்கி இன்றும் தொடர்ந்து அப்பணியை ஆற்றிவருகின்ற அன்புக்குரிய எமது செயற்குழு உறுப்பினர் மோகன் (ஞானசம்பந்தன் ஞானானந்தன்) அவர்களுக்கு எங்கள் நிறைவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வாறே எமது கடந்த மூன்று நிகழ்வுகளிலும் எமக்கு இலவசமாக ஒலி வசதியை வழங்கியதுடன் தன் இனிமையான குரலால் பாடல்களைப் பாடி எம்மை மகிழ்வித்த எம் அன்புக்குரிய Al London Tamil Karaoke இசைக்குழு உரிமையாளர் திரு. பாலாரவி அவர்களுக்கும் எம் நட்பு மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று எமக்கு ஒலி அமைப்பிற்கு உதவியுள்ள அவரின் சகோதரரும் எம் நிர்வாக குழு உறுப்பினருமான திரு. பாலா கஜன் (கஜேந்திரன்) அவர்களுக்கும் எங்கள் நேசமிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் இவ்விழாவிற்கு இன்று சிற்றுண்டி வகைகளைச் செய்து தந்துதவி செய்திட்ட எம் செயற்குழு உறுப்பினர் குடும்பத்தினருக்கும் இவ்விழா மலரை மிகமிகக் குறுகிய கால அவகாசத்தில் சிறப்பாக அச்சிட்டு உதவியுள்ள Rs Printer உரிமையாளர் ரமணன் (விஜய் ரமணன்) அவர்கள் , உதவியாளர் மூர்த்தி ஆகியோருக்கும் எங்கள் பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமக்குள்ள வேலைப் பளுக்களால், இம்முறை இம் மலரை வெளியிடுவதில்லை என முடிவு எடுத்திருந்தோம். எனினும் எம் செயற்பாடுகளை உங்களுக்கு இவ்வாறு வெளியிடப்படும் மலர்கள் மூலம் பகிர்ந்து கொள்ளுதல் மிகவும் அவசியம் என்று கருதி இறுதி நேரத்திலேயே மலரை வெளியிட முடிவு செய்தோம். நாம் கேட்டுக் கொண்டதற்கு அமைய மிகக் குறுகிய கால நேரத்தில் இம்மலருக்கான ஆக்கங்களையும், வாழ்த்துக்களையும் தந்துள்ள அனைவருக்கும் எம் அன்பான நன்றிகள். இம் மலரிற்கான பல ஆக்கங்களை மிகக் குறுகிய நேரத்தில் கணனியில் வடிவமைத்துத் தந்துதவிய எமது வேலணைச் செயலக உத்தியோகத்தர் செல்வி கஜந்தினி நவரத்தினம் அவர்கட்கும் எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பல்வேறு நிகழ்வுகள் ,பொறுப்புக்கள் மத்தியிலும் இங்கு நடாத்தும் கலை நிகழ்வுகளில், கலை நிகழ்வுகளைத் தந்து எமக்கு பேருதவி செய்கின்ற எம் இளைய தலைமுறையினருக்கு எம் நன்றியை உரிமையுடனும், உவமையுடனும் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது இன்றைய நிகழ்வு சிறப்புடன் நடந்திட இங்கு வந்து எம் நிகழ்வுகளை இறுதிவரை இருந்து பார்த்து எம்மையும் எம் இளைய தலைமுறையினரையும் உற்சாகப்படுத்திய, ஊக்கப்படுத்திய அனைத்து வேலணை உறவுகளுக்கும், நட்பு ரிதீயில் கலந்து சிறப்பித்த அனைத்து தமிழ் அன்பர்களுக்கும் எங்கள் நிறைவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**"எம் ஊரின் அபிவிருத்தியினூடே**
**எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வளமுடன்

## நீங்கள் வியக்கும் வண்ணம் வரைகலை செய்திட
## உங்கள் எண்ணம்போல் அச்சுப்பதிப்பு செய்திட

# ஆர். எஸ். பிரிண்டர்ஸ்

**விரைவான சேவை - தரமான அச்சுப்பதிப்பு - குறைந்த விலை**




Graphic Design - Printing - Brochures - Wedding Cards - Invitation Cards
Letterheads - Business Cards - Invoices - Foil Printing - Cake Boxes
Plastic Bags, Plastic Cards, Rubber Stamp

வரைகலை, அச்சுப்பதிப்பு, கண்கவரும் வண்ணங்களில் விதவிதமான அழைப்பிதழ்கள், பலகாரப் பெட்டிகள், அரங்கேற்ற மலர்கள், நினைவு மலர்கள், அலுவலகத்திற்குரிய அச்சுப்பதிவேடுகள் மற்றும் உங்கள் தேவைக்கான அனைத்து அச்சுப்பதிப்புக்களுக்கும் அணுகவும்.

20 வருட அனுபவம்

தரமான அச்சுப்பதிப்பு - குறைந்த விலை - விரைவான சேவை

RS PRINTERS


**RS Printers Ltd**, 88 Horsenden Lane North, Greenford, Middlesex UB6 7QH
T: **020 8782 3844**, M: **077 6522 4337**, Fax: 020 8903 6038
Email: **rsprintersltd@gmail.com, rsprintersltd@aol.com, www.rsprinters.com**


**உடன் தொடர்புக்கு: றமணன் - 077 6522 4337**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Compliments*

*from*

# Londis

**OFF LICENCE AND CONVENIENT STORES**

# 020 8848 1600

**152 UXBRIDGE ROAD**

**HAYES, MIDDX UB4 0JH**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org